(பதிப்புரிமையுடையது)

உ
சிவமயம்



விவேகானந்த சபை கொழும்பு
அகில இலங்கை
7 சைவசமய பாடப்பரீட்சை : 2021
தரம் ஏழு



nselva.com

காலம்	1.30 மணி
புள்ளிகள்	100

இல.	
மாணவர் சுட்டெண்:	

எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
பகுதி ஒன்றிற்கு இத்தாளிலேயே விடை எழுதுக.

பகுதி - I

1. மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

1. தாயுமானவர் சுவாமி மீது அன்பு கொண்ட மூதாட்டி செய்த இறை தொண்டு யாது?
   1. தினமும் கோயிலுக்குச் சென்று கோவிலைச்சுத்தம் செய்தல்.
   2. இறைவனுக்குப் பூமாலை கட்டிக் கொடுத்தல்.
   3. இறைவனின் பூசைக்கு வேண்டிய அபிடேகப் பொருட்களை வழங்கல்
   4. கோவிலிலே தினமும் திருமுறைகளைப் பண்ணோடு ஓதுதல்.
2. கர்ணன், கும்பகர்ணன் ஆகியோர் எப் பண்பிற்குச் சிறந்த எடுத்துக் காட்டாக விளங்குகின்றார்கள்?
   1) நன்றி மறவாமை 2) பணிவு 3) நீதி, நேர்மை 4) பொறுமை
3. "மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்" என்ற கூற்றைக் கூறியவர் யார்?
   1) அருணகிரிநாதர் 2) சேக்கிழார்
   3) கச்சியப்பசிவாச்சாரியார் 4) ஆறுமுகநாவலர்
4. ஏகநாதர் மீது பொறாமை கொண்டதால் அவர் மீது எச்சிலை உமிழ்ந்ததால் அவர் நீராடிய தீர்த்தம் எது?
   1) கங்கை நதி 2) காவேரி நதி 3) கோதவரி நதி 4) யமுனா நதி
5. இராமன் தன் சகோதரனாக ஏற்றுக்கொண்ட வானரத் தலைவன் யார்?
   1) விபீஷணன் 2) குகன் 3) சுக்கிரீவன் 4) வாலி
6. கிரகஹப் பிரவேசத்தில் - வாஸ்து சாந்தியின் நோக்கம் யாது?
   1) சிவாச்சாரியர்களைத் திருப்தி செய்தல்
   2) கோமாதா போன்ற பசுவைத் திருப்தி செய்தல்
   3) நவக்கிரகங்களைத் திருப்தி செய்தல்
   4) தேவர்களையும், பிரமனையும் திருப்தி செய்தல்
7. பின்வரும் விரதங்களுள் திதி விரதங்களில் அடங்காதது எது?
   1) சோம வார விரதம் 2) சதுர்த்தி விரதம்
   3) சஷ்டி விரதம் 4) ஏகாதசி விரதம்

8. நட்சத்திரங்கள் எத்தனை?

1) 12 2) 27 3) 18 4) 9

9. தக்கன் மகள் தட்சாயினியாகத் தாமரை மலரில் அவதரித்த நாள் எது?

1) மாசிமகம் 2) தைப்பூசம்

3) பங்குனித்திங்கள் 4) ஆவணி சதுர்த்தி

10. "மகர சங்கிராந்தி" என அழைக்கப்படும் பண்டிகை எது?

1) தீபாவளி 2) புதுவருடபிறப்பு 3) தைப்பொங்கல் 4) ஆடிப்பிறப்பு

11. அடங்கன் முறையில் அடங்கும் திருமுறைகள் எவை?

1) முதலாம் திருமுறையிலிருந்து ஏழாம் திருமுறை வரை

2) முதலாம் திருமுறையிலிருந்து எட்டாம் திருமுறை வரை

3) முதலாம் திருமுறையிலிருந்து ஒன்பதாம் திருமுறை வரை

4) முதலாம் திருமுறையிலிருந்து பத்தாம் திருமுறை வரை

12. பின்வருவோரில் சமயகுரவர் நால்வருள்ளும் காலத்தால் முற்பட்டவர் யார்?

1) காரைக்கால் அம்மையார் 2) மங்கையர்கரசியார்

3) அகத்தியர் 4) அப்பூதி அடிகள்

13. விருது குன்ற மா மேருவில்..... எனத் தொடங்கும் பதிகம் ஈழத்தின் எத்தலம் மீது பாடப்பட்டது?

1) திருக்கோணேஸ்வரம் 2) திருக்கேதீஸ்வரம்

3) முன்னேஸ்வரம் 4) கதிர்காமம்

14. தாச மார்க்கத்தைக் கடைப்பிடித்து முத்தியடைந்தவர் யார்?

1) மாணிக்கவாசகர் 2) சுந்தரர் 3) சம்பந்தர் 4) அப்பர்

15. பாலாவி என்னும் தீர்த்தக்கரையில் குடிகொண்ட இறைவன் யார்?

1) முருகன் 2) விநாயகன் 3) சிவன் 4) விஷ்ணு

16. திருவிசைப்பா பாடல்களைப் பாடியோர் தொகை எவ்வளவு ?

1) 1 2) 5 3) 9 4) 12

17. ஆலயத்தின் தூலலிங்கம் என அழைக்கப்படுவது எது?

1) இராஜகோபுரம் 2) கொடிமரம் 3) வசந்தமண்டம் 4) பலிபீடம்

18. சம்பந்தருக்கு திருக்கோலக்காவில் இறைவன் எதனை வழங்கினார்?

1) முத்துச்சிவிகை 2) பொற்றாளம் 3) முத்துக்குடை 4) பசிக்குப்பால்

19. அப்பர் "கண்ண வெண் சந்தனச் சாந்தும்....."என்ற பதிகம் பாடிய சந்தர்ப்பம் யாது?

1) நீற்றறையில் அடைத்த போது

2) கல்லோடு கட்டிக் கடலில் போட்டபோது

3) திருமறைக்காட்டில் கதவு திறக்க

4) மதம் கொண்ட யானையைச் சமணர் ஏவி விட்டபோது

20. திருத்தொண்டர் தொகை பாடியவர் யார்?

1) சேக்கிழார் 2) நம்பியாண்டார் நம்பி

3) சுந்தரமூர்த்திநாயனார் 4) திருமூலர்

21. திருவாசகம் எத்தனை பாடல்களைக் கொண்டது?

1) 400 2) 320 3) 655 4) 101

22. பொன்னம்பலவாணேச்சரத்தைக் கற்றளியாகக் கட்டிய பெருமை யாரைச் சேரும்?

1) சேர். பொன். இராமநாதன் 2) ஆறுமுகநாவலர்

3) இராஜேந்திர சோழன் 4) குணசிங்க ஆரியன்

23. நகுலேச்சரத்தின் தல விருட்சம் யாது?

1) வேம்பு 2) வில்வம் 3) மருதம் 4) புன்னை

24. மானிப்பாய் மருதடி விநாயகரின் இரத உற்சவம் நடைபெறும் நாள் எது?

1) ஆடி அமாவாசை 2) பங்குனித்திங்கள்

3) தைப்பொங்கல்தினத்தன்று 4) சித்திரை வருடப்பிறப்பு

25. அழகேசமுதலி என்பவரால் தலபுராணம் பாடப்பட்ட திருத்தலம் எது?

1) சித்தாண்டி முருகன் ஆலயம்

2) கொத்துக்குளம் முத்துமாரியம்மன் ஆலயம்

3) மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம்

4) தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலயம்

(25 புள்ளிகள்**)**

2. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. ஸ்ரீ பஞ்சாஷரத்திலே எத்தனை உரு செபித்தல் வேண்டும்

.....

2. திருஞானசம்பந்தர் நிகழ்த்திய அற்புதம் ஒன்றினைத் தருக?

.....

3. முருகனின் வாகனமாகக் கருதப்படும் மயிலின் கீழிருக்கும் பாம்பு எதனைக் குறிக்கின்றது?

.....

4. சங்குகள் பிரதானமாக இரண்டு வகைப்படும் அவை எவை?

.....

5. மாணிக்கவாசகச் சுவாமிகளுக்காகக் சுந்தரேஸ்வரர் பெருமான் மதுரை மாநகருக்கு எழுந்தருளி அருள் பாலித்த தினம் யாது?

.....

6. பஞ்சமா பாதகங்களில் ஏதாவது இரண்டினைக் குறிப்பிடுக?

.....

7. அஷ்ட ஐஸ்வர்யம் கிடைக்கும் என்பதற்காகக் கிரகபிரவேசத்தில் செய்யப்படும் கருமம் யாது?

.....

8. சோமவார விரதம் என்பது எவ்வாரத்திற்குரியது?

.....

9. பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை அனுஷ்டிக்கப்படும் விரதம் எது?

.....

10. மார்கழி மாத இறுதி தினத்தில் கொண்டாடப்படும் பண்டிகை எது?

.....

11. தமிழ் ஆகமம் எனப் போற்றப்படும் நூல் எது?

.....

12. திருமுறைகளுக்குப் பண் அமைத்தவர் யார்?

.....

13. காரைக்கால் அம்மையாரின் தந்தையார் பெயர் என்ன?

.....

14. "திருச்சிற்றம்பலம்"சொல்லப்படும் இரண்டு சந்தர்ப்பங்கள் யாவை?

.....

15. கேதீச்சரம் மீதும் கோணேஸ்வரம் மீதும் சம்பந்தர் எங்கிருந்து தேவாரம் பாடினார்?

.....

(15 புள்ளிகள்**)**

பகுதி - II

எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

1. பின்வரும் தொடக்கத்தையுடைய திருப்பாடல்களுள் இரண்டினைப் பிழையின்றி எழுதுக. பாடியவரின் பெயர், பாடப்பட்ட தலம் என்பனவற்றையும் எழுதுக.

1. "விருது குன்றமா ....."
2. "மாதர்ப் பிறைக்கண்ணி ....."
3. "பொன்னார் மேனியனே ....."
4. "வேதநெறி தழைத்தோங்க ....."

(2 x 5 = 10 புள்ளிகள்**)**

2. பின்வரும் தொடக்கத்தையுடைய திருக்குறள்களை எழுதுக.

1. "தனக்குவமை இல்லாதான் ....."
2. "விண்இன்று பொய்ப்பின் ....."
3. "ஐந்தவித்தான் ஆற்றல் ....."
4. "அறத்தான் வருவதே....."
5. "துறந்தார் பெருமை ....."

(1 x 5 = 5 புள்ளிகள்**)**

பகுதி - III

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

1. 1. சம்பந்தரின் பின்வரும் பதிகங்கள் பாடப்பட்ட சந்தர்ப்பங்களைத் தருக?

1) மட்டிட்ட புன்னை 2) வாழ்க அந்தணர் 3) சடையாயெனுமான்

2. திருநாவுக்கரசரின் வேறுபெயர்கள் மூன்று தருக?
3. சுந்தரமூர்த்தி நாயனாரின் சமயப்பணிகள் இரண்டு தருக?

(9 புள்ளிகள்**)**

2. 1. ஆகமம் சாராத வழிபாடு என்றால் என்ன?

2. நாட்டார் தெய்வ வழிபாட்டில் அடையாளச் சின்னங்கள் நான்கு தருக?
3. இரவு வேளைகளில் எத்தெய்வம் குடிகொண்டிருக்கும் இடத்திற்குத் தனியாகச் செல்லப் பயப்படுவார்கள்? இத்தெய்வத்திற்கான வழிபாட்டுத்தலம் யாழ்ப்பாணத்தில் எங்குள்ளது?

(9 புள்ளிகள்**)**

3. 1. “பணிவு” பற்றித் திருக்குறள் கூறும் குறள் ஒன்று தருக?

2. மாலும் அயனும் காணாத நீதியாக விளங்குபவர் யார்?

3. மனுநீதிகண்ட சோழனின் நீதி வழுவாச் செயற்பாட்டிற்கு எடுத்துக்காட்டினைச் சுருக்கமாக விளக்குக

(9 புள்ளிகள்)

4. 1. ஆலயம், கோயில் என்பவற்றின் பொருளைத் தருக?

2. ஆலயங்களில் செய்யக்கூடிய கிரியைத் தொண்டுகள் இரண்டு தருக?

3. அட்டாங்க நமஸ்காரத்தில் ஆண்களின் நிலத்திற் பொருந்தும் எட்டு உறுப்புக்களும் எவை?

(9 புள்ளிகள்)

5. 1. குறிஞ்சிக் குமரன் ஆலயம் எந்தப் பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ளது?

2. சித்தாண்டி முருகன் ஆலயத்தில் உள்ள எந்தத் கோயிலில் மட்டும் திரையைத் திறவாது பூசை நடைபெறும்?

3. கொத்துக்குளம் அம்மன் ஆலயத்தில் மார்கழித்திருவாதிரை கொண்டாடப்படும் விதம் பற்றிச் சுருக்கமபாக விளக்குக.

(9 புள்ளிகள்)

6. 1. பின்வரும் அட்டவணைகளில் உள்ள இடைவெளிகளில் பொருத்தமான விடையை எழுதுக.

1.

இலங்கையில் உள்ள பிரதான சமயங்கள்	சமங்களின் புனித நூல்கள்
1) சைவம்	
2) பௌத்தம்	
3) இஸ்லாம்	
4) கிறிஸ்தவம்	

(4 புள்ளிகள்)

2.

இலங்கையில் உள்ள பிரதான சமயங்கள்	கொண்டாடும் பண்டிகைகள்
1) சைவம்	
2) பௌத்தம்	
3) இஸ்லாம்	
4) கிறிஸ்தவம்	

(4 புள்ளிகள்)

3. இந்து சமயத்தவருக்கும் பௌத்த மதத்தினருக்கும் பொதுவான பண்டிகை எது?

(9 புள்ளிகள்)